**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.141/2022 தேதி- 03.02.2026
(P.W.1) - ரீடாமஜினி

குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து எங்கள் அனுபவத்தை தடை செய்யக் கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கின் பட்டிகை சொத்து எத்தனை என்றால் 3 சொத்துகளாகும். வழக்கு பட்டிகை சொத்தின் 1 ஆம் இன சொத்து சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.236/5, 236/7, 236/8 ஆகும். 2 ஆம் இன சொத்து சர்வே எண்.236/10 ஆகும்.3 ஆம் இன சொத்து சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.237/1 ஆகும். என் முதல் விசாரனையில் நான் என் கணவரை காதல் திருமணம் செய்கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் அதை பற்றிய எந்த குறிப்பும் என் வழக்கின் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வரதட்சனை கொடுமை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக புகார் அளித்துள்ளேனா என்றால் கன்னியாகுமரி மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். மேற்சொன்ன புகார் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

2. என் கணவர் எனக்கு எழுதி தந்த வா.சா.ஆ 1 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எத்தனை பட்டிகை சொத்துள்ளது என்றால் 3 பட்டிகை சொத்து எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 4 பட்டிகை சொத்துகள் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளது என்று நான் சொல்வது தவறு என்றால் 3 பட்டிகை சொத்துள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1 ஆம் இன சொத்து 4 1/4 சென்ட் என்றால் சரிதான். மேற்சொன்ன 4 1/4 சென்ட் சொத்தை என் கணவருக்கு அவர் அப்பா வல்சலம் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். 2 முதல் 4 வரை இன சொத்துகள் என் மாமனார் குடும்ப சொத்து என்றால் இல்லை. 02.06.2022 அன்று என் மாமனார் வல்சலம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் மாமனார் இறந்த பிறகு அவர் மனைவி மற்றும் 5 பிள்ளைகள் என்றால் சரிதான். 2 முதல் 4 இன சொத்து வல்சலம் சொத்து அவர் இறந்த பிறகு அவரின் மனைவி மற்றும் 5 பிள்ளைகளுக்கு தான் சொந்தமானது என்றால் சரியல்ல. வல்சலம் உயிருடன் இருக்கும் வரை வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 2 முதல் 4 இன சொத்து யார் பெயருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மேற்சொன்ன சொத்து வல்சலம் சொத்து இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 முதல் 4 இன சொத்துகள் வழக்கு பட்டிகை சொத்தாக சேர்த்துள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 -ல் உள்ள அனைத்து சொத்துகளையும் சேர்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் என் கணவர் என் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 ஆம் பக்கத்தில் 4 வது வரியில் குடும்ப பூர்வீக அவகாச பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக குடும்ப பூர்வீக சொத்து என்றால் என் கணவருடைய அப்பா அல்லது அம்மாவின் குடும்ப சொத்து என்றால் என் மாமனாருக்கு எந்த குடும்பசொத்தும் கிடையாது அவருக்கு அவகாசபட்ட சொத்தை விலைக்கு விற்றுவிட்டார். என் கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய குடும்ப பூர்வீக சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது சரியா அல்லது தவறா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள குடும்ப பூர்வீக சொத்து என்றால் எந்தெந்த சொத்தாகும் என்றால் 1,2,3 பட்டிகை சொத்துகள் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் கணவர் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட 2 முதல் 4 வரையான பட்டிகை சொத்துகள் இந்த வழக்கில் 1, 2, 3 இன சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவருக்கு எனக்கு ஏற்படுத்திக்கொடுத்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 2 முதல் 4 வரையான சொத்துகளை பொருத்து எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சட்டப்படி செல்லதக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 5 பட்டாக்கள் என் மாமனார் வல்சலத்துக்கு உரிமைப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவருக்கு எந்த உரிமையும் இல்லை.

4. வல்சலத்துக்கு சொத்தை இதே சர்வே எண்ணில் உள்ள சொத்தை விலைக்கு கொடுத்துவிட்டார் என்ற சங்கதியை இவ்வழக்கில் பிரதிவாதிகள் எதிர் உரை தாக்கல் செய்த உடன் Reply Statement மூலம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 16 வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணம் போலியானது என்றாலும் வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தவேண்டி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலருக்கு Possesion Cetificate வழங்க அதிகாரம் இல்லை என்றாலும் தாசில்தாருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. என் கணவருக்கு பட்டிகை சொத்தில் ஒரு போதும் கைவசம் இல்லை என்றாலும் தற்போதும் வல்சலம் கைவசத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என் மாமி 23.12.2022 அன்று மாவட்ட பதிவாளர் அலுவலகம் மார்த்தாண்டத்தில் மேற்சொன்ன

வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்யவேண்டும் என்று ஒரு மனு அளித்தார் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளர் அலுவலர் மார்த்தாண்டம் விசாரணை செய்து வா.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. ஒரே ஒரு அறிவிப்பு மட்டும் வழங்கப்பட்டது. நான் என் ஆவணங்களை மேற்சொன்ன அலுவலரிடம் தாக்கல் செய்த பிறகு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

5. வா.சா.ஆ.1 ஆவணம் ரத்து செய்யப்பட்ட விவரத்தை வில்லங்கசான்றிதழ் பிரதிபலிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தை ரத்து செய்த உத்தரவின் மீது தற்போது வரை ரத்து செய்து வேறு எந்த ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் அதை ரத்து செய்ய மனு செய்து தற்போது நிலுவையில் உள்ளது. நான் மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு விசாரணைக்கு ஆஜராகி விசாரணை நடத்தப்பட்டு ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு தான் வா.சா.ஆ.1 ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மீண்டும் விசாரணைக்கு அழைப்பதாக சொல்லிதான் என்னிடம் ஆவணங்களை பெற்றுக்கொண்டு அனுப்பி வைத்தார்கள். வல்சலத்தின் அவகாசிகளை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்குஉரிய பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்படாததால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு வல்சலம் மனைவி மற்றும் பிள்ளைகள் வாதியாகவும் என்னையும் என் கணவரையும் பிரதிவாதியாக சேர்த்து அசல் வழக்கு எண்.400/2024 மாண்புமிகு சார்பு நீதிமன்றம் பத்மனாபபுரத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது அந்த வழக்கு நடத்தப்படாததால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

6. மேற்சொன்ன வழக்கை மீண்டும் விசாரிக்க Restore Petition தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணமான ஒரு உயில் ஆவணம் எனக்கு எப்போது கிடைத்தது என்றால் 2018 ல் கிடைத்தது. மேற்சொன்ன உயில் ஆவணத்தைப்பற்றி வா.சா.ஆ.1 ஆவணத்திலும், வழக்கின் பிராதிலும் சொல்லவில்லை என்றால் பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் என்பதால் அதைப்பற்றி குறிப்பிடவில்லை. வா.சா.ஆ. 8 ஆவணத்தை இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வந்தபோது தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன வா.சா.ஆ.8 ஆவணம் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் இருந்ததால் அதைப்பற்றி சொல்லவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தங்கத்துக்கு உரிமைப்பட்ட சொத்தை எனக்கு கிடைத்து அதன் அடிப்படையில் எனக்கு

எழுதிக்கொடுத்தாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன உயில் ஆவணம் பதிவு செய்யப்படாததால் பதிவாளர் அறிவுறுத்தலின் படி மேற்சொன்ன சங்கதியை வா.சா.ஆ.1 -ல் குறிப்பிடவில்லை. வழக்கின் பிராதிலும், வா.சா.ஆ 8 ஆவணமான உயிலை பற்றி ஏதும் குறிப்பிடாமல் Orally surrendered என்று மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 ஆவணம் இவ்வழக்கை தாக்கல் செய்த பிறகு வழக்கிற்கு வேண்டி தயார் செய்யப்பட்ட போலி ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.13 ஆவணத்திற்கு இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடையது. வா.சா.ஆ.13 ஆவணத்தில் எனக்கு உயில் எழுதிக்கொடுத்த தங்கமும் அவரின் கணவர் பெயர் தருமராஜ் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. எந்தவித பாகமும் செய்யப்படாததால் பெயர் குறிப்பிடப்படவில்லை. தருமராஜ் மற்றும் தங்கத்துக்கோ இந்த வழக்கு பட்டிகை சொத்தில் அவகாசம் உள்ளது என்று காண்பிக்க எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கு பட்டிகை சொத்துவல்சலத்துக்கு உரிமைப்பட்ட சொத்து என்பதால்தான் தங்கம் மற்றும் தர்மராஜ்க்கு உரிமைப்பட்ட சொத்து என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு முழுக்க முழுக்க போலியாக உருவாக்கப்பட்ட வழக்கு என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏதாவது உரிமை கோரவேண்டும் என்றால் அசல் வழக்கு எண்.400/2024 என்ற பாக வழக்கில் தான் உரிமைகோர முடியும் என்றால் சரியல்ல.